# "... முதல் முதல் அந்தியோகியாவிலே ..." [11:19-30]

எந்த ஒரு செயலுக்கும் முதல் முதல் என்பது விசேஷ மானதாய் இருக்கின்றது. 1876ல் அலெக்சாண்டர் கிரஹாம் பெல் அவர்கள் தனது துணியில் அமிலத்தைச் சிந்த விட்டு, கவனக்குறைவாக அச்செய்தியை தமது புதிய கண்டு பிடிப்பான தொலைபேசியின் வழியே முதன்முதலாக அனுப்பினார்: "திரு. வாட்சன் அவர்களே, இங்கே வாருங்கள். நீங்கள் இங்கு வந்து உதவ வேண்டும்.'' NBC யைச் சேர்ந்த நகரும் தொலைக் காட்சிக்குழுவொன்று 1938ல் தனது புகைப்படக் கருவிகளைத் தற்செயலாகத் திருப்பி, கொழுந்து விட்டெரியும் நெருப்பைப் படம் பிடித்த போது, தகவல் காட்சிகளை நேரடி ஒளிபரப்பும் முறையானது முதன்முறையாகச் செயல்பட்டது. 1951ல் IBM நிறுவனமானது தனது முதல் கணனியை அறிமுகப்படுத்தி, உலகத்தின் வியாபார முறைமையை மாற்றியமைத்தது. 1969ல் நீல் ஆர்ம்ஸ்ட்ராங் அவர்கள் முதல் முதலாக சந்திரனில் காலடி எடுத்து வைத்தபோது நம்மில் அநேகர் மெய்மறந்து போனோம்.

தனிப்பட்ட வகையிலும் "முதல் முதல்" என்பது விசேஷமா னதாகவே இருக்கின்றது. எனது மனைவியை முதல் முதலாகப் பார்த்த வேளை இன்னமும் எனது நினைவில் இருக்கின்றது. எனது மூன்று மகள்கள் மற்றும் எனது பேரக் குழந்தைகள் ஆகியோரை முதல் முதலாகப் பார்த்த அந்த விசேஷவேளை களை மறுபடியும் நினைவு கூருகின்றேன். எனது முதலாவது பட்டியலில் எனது முதல் கார், எனது முதல் பிரசங்கம், மேலும் எனக்குப் பிடித்த உணவு வகையை நான் முதல் முதலாக ருசி பார்த்த வேளை முதலியவைகளும் சேர்க்கப்பட முடியும்.

சில முதலாவதுகள் குறிப்பிடத்தக்கவை; மற்றவை

அவ்வளவு முக்கியமானவையல்ல. மிக மிக முக்கியமாய்க் குறிப்பிடத்தக்க முதலாவது ஒன்று அப். 11:26ல் காணப்படுகின்றது: "... முதல் முதல் அந்தியோகியாவிலே சீஷர்களுக்குக் கிறிஸ்தவர்கள் என்கிற பேர் வழங்கிற்று." "கிறிஸ்தவர்கள்" என்ற பெயரானது எவ்வளவு புகழ் வாய்ந்ததாய் இருக்கிறதென்றால், இப்பெயர் சபையின் தொடக்க நாட்களில் பயன்படுத்தப்படவில்லை என்றறியும் போது சிலருக்கு இது வியப்பாயிருக்கும். இது எவ்வாறு தொடங்கியது? இது ஏன் அந்தியோகியாவிலிருந்து தொடங்கியது? இது போன்ற சில கேள்விகளை நாம் இந்தப் பாடத்தில் காணப் போகின்றோம்.

நமது இந்தக் கட்டுரையானது அந்தியோகியா பட்டணத்தை மையமாகக் கொண்டதாகும். முதல் முதலாக அப். 6:5ல் அந்தியோகியாவைப் பற்றி படிக்கின்றோம். சபையின் செயல்பாடுகள் பற்றிய லூக்காவின் கவனமானது எருசலேமிலிருந்து அந்தியோகியாவுக்கு இடம் பெயரத் தொடங்கியதாக 11:19-30ல் காணப்படுகின்றது. 13ம் அதிகாரத்திலிருந்து, பவுலின் சுவிசேஷ ஊழியப் பயணங்களுக்கு அந்தியோகியாவே ஆதார இடமாய் இருந்ததைப் பார்க்கப் போகின்றோம்.

தேவனுடைய திட்டத்தின்படி நீங்களும் நானும் ஒரு பட்டணத்தைப் பயன்படுத்துவதென்றால் உண்மையில் நாம் அந்தியோகியாவைத் தேர்ந்தெடுக்க மாட்டோம். சீரியாவின் அந்தியோகியா, உலகத்தின் மிக முக்கியமான பட்டணங்களில் ஒன்றாக இருந்தது. இது செலியூக்கஸ் நிக்கோடரால் (அந்தியோகியா பட்டணத்தில் உள்ள துறைமுகத்திற்கு செலூக்கியா என்ற தன் பெயரையே இட்டார் அப். 13:4). தோற்றுவிக்கப்பட்டு, அவரது தகப்பனாகிய முதலாம் அந்தியோகின்[1] நினைவாகப் பெயரிடப்பட்டது. உலகத்தின் மூன்றாவது பெரிய பட்டணம் (மற்றவை ரோமாபுரியும், அலெக்ஸாந்திரியாவும் மிகப் பெரியவைகளாயிருந்தன. அந்தியோகியாவில் ஐந்து இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் வாழ்ந்தனர்). என்ற நிலை வரைக்கும் அந்தியோகியாவானது வளர்ந்து வளம் பெற்றிருந்தது. அது ஒரு அழகிய பட்டணமாகவும், அரசியல் மற்றும் வணிக நிறுவனங்களின் அச்சாணி போன்ற இடமாகவும் இருந்தது. அது கொரிந்து பட்டணத்திற்கு அடுத்தபடியாக உலகத்திலேயே தேவபக்தியற்ற நகரங்களில் முதன்மையானதாகவும் இருந்தது. அந்தப்

பட்டணத்தின் தென்கோடியில் தாபேனின் ஆலயம் இருந்தது, அங்கு தாபேனை வழிபடுபவர்கள், கிரேக்கக் கடவுளான அப்பொல்லோ, தாபேன் என்ற ஆசாரியப் பெண்ணைத் துரத்திச் செல்லும் (மற்றும் அவளுடன் வேசித்தனம் பண்ணும்) நிகழ்ச்சியை மறுபடியும் அரங்கேற்றம் செய்வது வழக்கமாகும். அந்தியோகியாவின் ஒழுக்கக்கேடு எந்த அளவுக்கு நன்கறியப் பட்டிருந்ததென்றால், ரோமாபுரியின் ஒழுக்க வாழ்வு சிதைந்து விழுந்தபோது, ஒரு கவிஞர், ஓரான்ட்ஸின் கழிவுகள் யாவும் தைபருக்குள் பெருக்கெடுத்துப் பாய்ந்தன என்று கூறினார். (ஓரான்டஸ் என்பது அந்தியோகியா பட்டணத்தின் நதியாக வும், தைபர் என்பது ரோமாபுரிப் பட்டணத்தின் நதியாகவும் இருந்தன.) அளவில் பெரியதாகவும், வெளிப்புறத்தில் முற்றிலும் பொருளாதாய நோக்கமுடையதாகவும் தேவ பக்தியின்மை என்பதையே மையப்பொருளாகவும் கொண் டிருந்த அந்தியோகியாவானது எருசலேமுக்கு எதிரிடையான தாக இருந்தது. ஆனாலும் கூட, தேவனுடைய அருளிரக்கத்தில் அந்தியோகியா பட்டணமானது, அப். நட. புத்தகத்தின் பின்பாதி செயல்பாடுகளின்படியான அவரது திட்டம் மற்றும் நோக்கங்களுக்கு மையமான இடமாக அமைந்தது. அந்தியோ கியா என்பது தேவனுடைய சத்தியத்தின் கருத்துப் பாடமாக இருந்தது: சுவிசேஷம் என்பது உண்மையில் எல்லாருக்கும் உரியதேயாகும்!

அந்தியோகியாவில் நடந்த "முதல் முதல்" ஒன்றை நாம் ஏற்கனவே குறிப்பிட்டிருக்கின்றோம். நமது பாடத்தை நாம் தொடர்ந்து படிக்கையில் சீரியாவின் இந்தப் பட்டணத்தில் தொடங்கிய குறிப்பிடத் தக்க அநேக முதல் முதல் நிகழ்ச்சி களை நாம் காண்போம்.

## "எல்லாருக்குமான" சுவிசேஷமானது முதல் முதல் அந்தியோகியாவிலே எல்லாருக்கும் பிரசங்கிக்கப்பட்டது (11:19, 20)

அதிகாரம் 8ல் ஊசலாடும்படி விடப்பட்ட ஒரு நூலி ழையை லூக்கா, அப். 11:19ல் மறுபடியும் பற்றியெடுத்துக்

*கொண்டார். 8:1, 4ல் நாம்,*

> *அக்காலத்திலே [ஸ்தேவான் கொலை செய்யப்பட்ட காலத்திலே] எருசலேமிலுள்ள சபைக்கு மிகுந்த துன்பம் உண்டாயிற்று; அப்போஸ்தலர்தவிர மற்ற யாவரும் யூதேயா சமாரியா தேசங்களில் சிதறப்பட்டுப் போனார்கள் (வ. 1).*
>
> *சிதறிப் போனவர்கள் எங்குந்திரிந்து, சுவிசேஷ வசனத்தைப் பிரசங்கித்தார்கள், (வ. 4) என்று படிக்கிறோம்.*

*அதிகாரம் 11க்கு முன்பு, பலஸ்தீனத்தின் கண்பார்வைக்குட் பட்ட பகுதிகளில் பிரசங்கிக்கப்பட்ட நிகழ்ச்சிகளிலே லூக்கா கவனம் செலுத்தினார். இப்பொழுது காலங்கள் கடந்த போது, சபையின் உறுப்பினர்கள் தங்களுடன் இயேசுவின் செய்தியை எடுத்துக் கொண்டு தூரமான இடங்களுக்குப் பயணம் செய்தனர்: "ஸ்தேவான் நிமித்தமாய் எழும்பின உபத்திரவத் தினாலே சிதறப்பட்டவர்கள் ... பெனிக்கே நாடு, சீப்புருதீவு, அந்தியோகியா பட்டணம் வரைக்கும் சுற்றித் திரிந்தார்கள்" (வ. 19). பெனிக்கே நாடு என்பது, பலஸ்தீனத்தின் வடக்கு முனையிலிருந்து மத்திய தரைக் கடல் ஓரமாக பதினைந்து மைல் அகலத்தில் வடக்கு நோக்கி சுமார் 120 மைல்கள் வரையிருந்த நிலப்பகுதியாகும் (படத்தை பார்க்கவும்). சிதறடிக்கப்பட்ட சீஷர்கள், ஒரு கால கட்டத்தில் (எப்பொழு தென்று லூக்கா கூறவில்லை), பெனிக்கே நாடு (15:3) வரையிலும் சென்று, சுவிசேஷத்தைப் பிரசங்கித்து சபைகளை நிலைநாட்டினார்கள். (தீரு, சீதோனில்; 21:3-7; 27:3). அங்கிருந்து சிலர் கடற்பயணத்தின் மூலம் சீப்புருதீவு சென்று சுவிசேஷத்தைப் பகிர்ந்து கொண்டனர் (பவுலும் பர்னபாவும் "முதல் சுவிசேஷ ஊழியப் பிரயாணத்தில்" சீப்புருதீவுக்குச் சென்றபோது சுவிசேஷம் ஏற்கனவே அறிவிக்கப் பட்டிருந் தது), மற்றவர்கள் இன்னும் வடக்கே சீரியாவுக்குள் சென்று அந்தியோகியாவிலும் பிரசங்கித்தார்கள். ஆயினும் அந்த வேளையில் இயேசுவைப் பின்பற்றிய மற்றவர்கள் போலவே, அவர்களும் "சுவிசேஷ வசனத்தை யூதர்களுக்கேயன்றி மற்ற ஒருவருக்கும் அறிவியாமலிருந்தார்கள்" (வ. 19ஆ).*

*பின்பு, அவர்கள் இருந்த இடத்திற்குத் தெற்குப் பகுதியில், குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியொன்று நடைபெற்றது. சுவிசேஷமா*

னது முதல் முதல், புறஜாதியாருக்குப் பிரசங்கிக்கப்பட்டது. மற்றும், புறஜாதியார், சபையின் ஐக்கியத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டார்கள் (அப். 10). "ஜீவனுக்கேதுவான மனந் திரும்புதலைத் தேவன் புறஜாதியாருக்கு அருளிச் செய்(திருந்) தார்" (11:18) என்ற செய்தியானது வடக்கு நோக்கிப் பரவியது. இதன் விளைவாக, "அவர்களில் சீப்புருதீவாரும், சிரேனே[2] பட்டணத்தாருமாகிய சிலர் அந்தியோகியா பட்டணத்துக்கு வந்து, கிரேக்கருடனே பேசி, கர்த்தராகிய[3] இயேசுவைக் குறித்துப் பிரசங்கித்தார்கள்" (வ. 20). "கிரேக்கர்" என்பது கிரேக்க மொழி பேசும் புறஜாதியாரைக் குறிக்கின்றது. (6:1ல் இதே போன்ற ஒரு வார்த்தையானது கிரேக்க மொழி பேசும் யூதர்களைக் குறிக்கப் பயன்பட்டது.) பதிவுகளின்படி முதன்முறையாக புறஜாதியாருக்கு நற்செய்தியை அறிவிக்கும் படி மனிதர்களின் வெளிப்படையான முயற்சி நடைபெற்றது! (கொர்நேலியுவுக்கு நற்செய்தி அறிவிக்கப்பட்ட நிகழ்ச்சியில் பேதுருவல்ல, தேவனே முதல் முயற்சியெடுத்தார் என்பதை நினைவில் வையுங்கள்.) இனப் பாகுபாடின்றி எல்லா மனிதர் களையும் நேசித்த அந்தச் சுவிசேஷகர்களின் பெயர்களை நாம் அறியவில்லை (13:1; இவர்களில் சிலரது பெயர்கள் 13:1ல் தரப்பட்டவைகளாயிருக்கலாம்) - ஆனால் தேவன் அறிந்திருக் கின்றார். இழந்து போன நிலையில் உள்ள பாவிகளுக்கு வசனத்தை அறிவிப்பது முக்கியமானதாயிருக்கின்றது; செய்த வேலைக்குப் பாராட்டுப் பெறுவதென்பது முக்கியமல்ல.

## "எல்லாருக்குமான" ஒரு பிராந்திய சபையானது முதல் முதல் நிலைநாட்டப்பட்டது (11:21)

பெயர் கூறப்படாத அந்த நாயகர்கள், அந்தியோகியாவில் இருந்த புறஜாதியாருடன் சுவிசேஷத்தைப் பகிர்ந்து கொண்ட பொழுது, தேவன் அவர்களின் பிரயாசத்தை ஆசீர்வதித்தார். "கர்த்தருடைய கரம் அவர்களோடே இருந்தது" (வ. 21அ). பழைய ஏற்பாட்டின் இந்தச் சொற்றொடரானது தெய்வீக அங்கீகாரத்தைச் சுட்டிக்காட்டுவதற்காக லூக்காவினால் பயன்படுத்தப்பட்டது (13:11; லூக். 1:66). சில வேளைகளில்

*இந்த அங்கீகாரமானது அற்புதங்களினால் சாட்சியளிக்கப் பட்டது (4:30); ஒருவேளை இவ்விடத்திலும் அப்படி நடந்திருக்கலாம்.*[4]

*சுவிசேஷத்தைப் பிரசங்கித்தலில் தேவனுடைய ஆசீர் வாதம் இருந்தபடியினால், "அநேக ஜனங்கள் விசுவாசிகளாகி, கர்த்தரிடத்தில் திரும்பினார்கள்'' (விசுவாசித்தல் மற்றும் திரும்புதல் [மனந்திரும்புதல்] என்பவை இரண்டு தனித் தனிச் செயல்களாயிருக்கின்றன, அப். 3:20ப் போல்) (வ. 21ஆ). அந்நிய தேவத வணக்கத்தினால் இளைப்படைந்திருந்த புறஜாதியாரில் ''அநேகர்'' செய்தியை ''விசுவாசித்து'', கொர்நேலியு மற்றும் அவரது வீட்டார் செய்திருந்தது போலவே (10:48), "கர்த்தரிடத்தில் திரும்பினார்கள்" (3:20) - அவர்கள் கர்த்தருக்குள் ஞானஸ்நானம் பெற்று (கலா. 3:26, 27) தேவனால் சபையில் சேர்க்கப்பட்டார்கள் (2:41, 47).*

*இதற்கு முன் அமைந்திராத வகையிலான ஒரு புதிய பிராந்திய சபை நிலைநாட்டப்பட்டது. அதில் புறஜாதியார் ஏராளமாயிருந்தார்கள் (11:19-21), ஆனாலும் அதில் யூத உறுப்பினர்களும் இருந்தார்கள். அவர்களின் சபைக் கூட்டங் களில் யூதர்களும் புறஜாதியாரும் தோளோடு தோள் பொருந்த அமர்ந்திருந்தார்கள். அவர்கள் ஒன்றுகூடிப் பிரசங்கத்தைக் கேட்டார்கள், ஒன்றுகூடி ஜெபித்தார்கள், ஒன்றுகூடி தேவனைப் புகழ்ந்தார்கள், ஒன்று கூடி கர்த்தருடைய பந்தியில் பங்கேற்றார்கள். முதல் முதல், யூதர் மற்றும் புறஜாதியார் ஒரே பிராந்திய சபையின் உறுப்பினர்களாய் ஒன்றுகூடி ஆராதித்து, ஊழியம் செய்து உணவு உண்டார்கள். அந்தியோகியாவின் ஒரு புறம் யூதர்களுக்கான பிராந்திய சபையும், மறுபுறம் புறஜாதியா ருக்கான பிராந்திய சபையும் இருக்கலாம் என்ற கருத்தே அவர்களுக்கு நிச்சயம் வெறுப்பூட்டுவதாய் இருந்திருக்கும். அவர்களிடையில் இருந்த தடைகளை இயேசு உடைத் தெறிந்தார் அல்லவா? அவர்களை அவர் ஒன்றாக்கியிருந்தார் அல்லவா? (எபே. 2:15, 16; கலா. 3:26-28ஐக் காணவும்.)*

## “எல்லாருக்குமான” யூதர்களின் அக்கறை முதல் முதல் நடைமுறையில் விளக்கப்பட்டது (11:22-24)

புறஜாதியாருக்குப் பேதுரு பிரசங்கித்த செய்தியானது வடக்கு நோக்கிச் சென்றது போலவே, புறஜாதியாரும் இணைந்த புதிய பிராந்திய சபை நிலைநாட்டப்பட்ட செய்தி யானது தெற்கு நோக்கிச் சென்றது. ‘‘எருசலேமிலுள்ள சபையார் இந்தக் காரியங்களைக் குறித்துக் கேள்விப்பட்ட போது” (வ. 22அ). இதற்கு முன், சமாரியர் தேவ வசனத்தை ஏற்றுக் கொண்டதை அப்போஸ்தலர்கள் கேள்விப்பட்ட போது, அங்கு அவர்கள் பேதுருவையும் யோவானையும் அனுப்பியிருந்தனர் (8:14). இப்போது எருசலேம் சபையார், “அந்தியோகியா வரைக்கும் போகும்படிக்குப் பர்னபாவை அனுப்பினார்கள்” (11:22ஆ).[5]

எருசலேமில் இருந்த சபையார், புறஜாதியார் இணைந்த புதிய பிராந்திய சபை நிலைநாட்டப்பட்ட செய்தியால் கலவரமடைந்ததாகவும், சூழ்நிலையை ஆராயும்படி பர்னபாவை அங்கு அனுப்பி வைத்ததாகவும் பொதுவாகக் கருதப்படுகின்றது. ஒருவேளை எருசலேம் சபையிலிருந்த சிலர் (‘‘விருத்தசேதனக் குழுவில்’’ இருந்தவர்கள் 11:2) அதிர்ச்சி யடைந்திருக்கலாம், எருசலேம் சபையின் முன்னோடிகள் அவர்களை அமைதிப்படுத்த விரும்பியிருக்கலாம், ஆனால் அதுதான் அவர்கள் பர்னபாவை அனுப்பியதன் அடிப்படை நோக்கமா என்பதில் நான் சந்தேகப்படுகின்றேன். ஏனென்றால் ஒரு குறுகிய காலவரையறைக்கு முன்புதான் எருசலேமில் இருந்த எல்லாக் கிறிஸ்தவர்களும் சேர்ந்து, “அப்படியானால் ஜீவனுக்கேதுவான மனந்திரும்புதலைத் தேவன் புறஜாதி யாருக்கும் அருளிச் செய்தார்’’ [அது கொர்நேலியுவின் வீட்டாருக்கு மட்டுமல்ல ஆனால் பொதுவாக புறஜாதியார் யாவருக்கும் உரியது] என்று கூறி ‘‘தேவனை மகிமைப் படுத்தினார்கள்” (11:18). அவர்கள் அனுப்பிய மனிதரினாலும் நான் சந்தேகப்படுகின்றேன். அவர்கள் “குற்றம் பிடிக்கும் ஆய்வாளர்’’ ஒருவரை அனுப்பி வைக்கவில்லை, அவர்கள் சபையில் தாராள இருதயத்துடன் இருந்த ஒரு மனிதரை

*அனுப்பி வைத்தார்கள். அம்மனிதர் ஒவ்வொரு சூழ்நிலை யிலும் ஒவ்வொரு நபரிடத்தில் இருந்த நல்லவைகளையே கண்டார், அவர் தம் பழைமை வாதத்திற்காய் அல்ல மாறாக, அவரிடத்தில் விளங்கிய அன்பிற்காய்க் குறிப்பிடத் தக்கவரா யிருந்தார். அவர்கள் பர்னபாவை அனுப்பினார்கள் (4:36; 9:26, 27). கடைசியாக, பர்னபா அங்கு சென்றபோது செய்த விஷயங்களினால், நான் சந்தேகப்படுகின்றேன். அதிகாரம் 3ஐ நாம் கற்றபோது, பேதுருவும் யோவானும் தேவாலயத்திற்குச் சென்றதின் அடிப்படை நோக்கத்தை, அவர்கள் அங்கு சென்றபோது செய்த செயலை (ஒரு பிச்சைக்காரனைக் குணமாக்கியதினால் அவர்கள் ஒரு கூட்டத்தைக் கூடச் செய்து, அந்தக் கூட்டத்தாருக்கு பிரசங்கித்தனர்.) கண்டதால் கண்டறிய முடிந்தது என்ற ஆலோசனையை முன் வைத்தோம். அதே போல, சபையார், பர்னபாவை அனுப்பியதன் அடிப்படை நோக்கத்தை, அவர் அந்தியோகியா சென்றதும் செய்த செயல்பாட்டைக் காண்பதன் மூலம் கண்டறிய முடியும். அவர் அங்குள்ள ஊழியப் பணிகளைப் பரிசோதிக் கவோ அல்லது அவை பற்றிய அறிக்கையொன்றை எருசலே முக்கு அனுப்பவோ இல்லை. மாறாக, அவர் அவர்களை ஊக்கப்படுத்தத் தொடங்கினார் (வ. 23).*

*பர்னபாவை அந்தியோகியாவுக்கு அனுப்புதல் என்ற செயல்பாடானது, எருசலேம் சபையாரின் பகுதியில், முதலா வதாக மற்றும் முதன்மையாக அவர்களின் அன்பு மற்றும் ஆதரவின் வெளிப்பாடாகவே இருந்தது. அந்தியோகியாவில் இருந்த புதிய சிறகடிக்கும் குழுவினர், தங்களுக்குப் பின்பல மாக எருசலேம் சபையார் இருக்கின்றார்கள் என்பதை உணர வேண்டும் என்பதே, அவர்களின் அடிப்படை நோக்கமாயிருந் தது. ஆகையால் அந்தக் குறிப்பிட்ட பணிக்குத் தகுதியான மனிதரை அவர்கள் அங்கு அனுப்பினார்கள். பர்னபா, சீப்புரு தீவில் பிறந்தவராகையால் (4:36), அந்தியோகியா அவருக்கு மிகவும் பழக்கமான பகுதியாயிருந்தது. அவருடன் அந்தி யோகியா சென்றிருந்த சீப்புரு தீவைச் சேர்ந்த ஒரு நண்பரும் கூட இருந்திருக்கலாம். மேலும், யூத(கிரேக்க)ர் என்ற வகையில், பர்னபா, அந்தியோகியாவின் பன்மைச் சமூகத்தில் எதிர் கொள்ளப்பட்டிருந்த பிரச்சனைகள் பற்றி அதிகம் கூருணர் வுடையவராய் இருந்திருக்க வேண்டும். பர்னபாவை அனுப்*

*புதல் என்பது, எருசலேம் சபையாரின் ஆவிக்குரிய செயலான்மைத்திறனின் மிகச் சிறந்த வெளிப்பாடாகும். ( அவர்களது முடிவுக்கு ஆவியானவர் ஒரு பங்கு வகித்தார் என்பதில் சந்தேகமில்லை.)*

*வசனம் 23, "அவன் [அந்தியோகியாவுக்கு] போய்ச் சேர்ந்து, தேவனுடைய கிருபையைக் கண்டபோது, சந்தோஷப்பட்டு" (வ. 23அ) என்று குறிப்பிடுகின்றது. புறஜாதியார் ஏற்றுக் கொள்ளப்பட்டதையும், யூதர்கள் மற்றும் புறஜாதியார் ஆகியோர் ஒருவரிலொருவர் அன்புகூருவதையும் பர்னபா கண்டபோது, அவரது இருதயத்தில் மகிழ்ச்சி கரைபுரண்டு ஓடியது. அவர்கள் ஒரு மாபெரும் தொடக்கத்தைச் செய்திருந்தார்கள், எனவே அவர், "கர்த்தரிடத்தில் மனநிர்ணய மாய் (முழு இருதயத்தோடும் - NIV) நிலைத்திருக்கும்படி எல்லாருக்கும் புத்தி சொன்னார்" (வ. 23ஆ). தொடங்குதல் என்பது ஒரு விஷயமாய் இருக்கையில், தொடங்கியதைப் பாதுகாத்தல் என்பது இன்னொரு விஷயமாய் இருக்கின்றது.*

*வசனம் 24ல் பர்னபாவைப் பற்றிய ஆவிக்குரிய சில குறிப்புகள் தரப்படுகின்றன: "அவன் நல்லவனும், பரிசுத்த ஆவியினாலும் விசுவாசத்தினாலும் நிறைந்தவனுமாயிருந் தான்" (வ. 24அ). அப். நட. புத்தகத்தின் பக்கங்களில் நல்ல மனிதர்கள் அநேகரின் பெயர்கள் நிறைந்துள்ளன, ஆனால் பர்னபா ஒருவர்தான் லூக்காவால் "நல்ல மனிதர்" என்று அழைக்கப்பட்டார். அவரைப் பார்ப்பவர்கள் "அவர் ஒரு நல்ல மனிதர்" என்றுதான் நினைக்க முடிந்தது. "பரிசுத்த ஆவியி னாலும்,[6] விசுவாசத்தினாலும் நிறைந்தவர்" என்ற சொற்றொட ரானது, இதற்கு முன் யூத(கிரேக்க)ரான ஸ்தேவானைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டது (6:5). பர்னபா தனி வகைச் சிறப்புடையவராயிருந்தார்.*

*பர்னபா ஊக்கமூட்டியதின் விளைவானது, வசனம் 24ன் முடிவில் கூறப்படுகின்றது: "அநேக ஜனங்கள் கர்த்தரிடமாய்ச் சேர்க்கப்பட்டார்கள்." சபையின் ஆவிக்குரிய வளர்ச்சி பற்றி அவருடைய வலியுறுத்தமானது எண்ணிக்கை வளர்ச்சி என்ற விளைவை ஏற்படுத்திற்று. ஒருவேளை நாம் எண்ணிக்கையில் வளர வேண்டிய அளவுக்கு வளராமல் இருப்பதற்கு, நாம் ஆவிக்குரிய விதத்தில் வளர வேண்டிய அளவு வளராமல் இருப்பதே காரணமாயிருக்கலாம்.*

## “எல்லாருக்குமான” அப்போஸ்தலர் முதல் முதல் பயன்படுத்தப்பட்டார் *(11:25, 26)*

*ஒருவருடைய எண்ணக் கனவுகளைக் காட்டிலும் அதிகமாக அந்தியோகியாவின் ஊழியம் வெற்றியடைந் திருந்தாலும், பர்னபா, “சவுலைத் தேடும்படி, தர்சுவுக்குப் புறப்பட்டுப் போனார்” (வ. 25). 9ம் அதிகாரத்தில் எருசலேமில் இருந்த யூத (கிரேக்க) ர்கள் அவரைக் கொல்ல முயன்றபோது, எருசலேமின் சகோதரர்கள் சவுலை அவரது சொந்த ஊராகிய தர்சுவுக்கு கப்பலேற்றிய போது சவுல் கடைசியாய்க் காணப் பட்டார். ஏழு அல்லது அதற்கு மேற்பட்ட வருடங்களாகச் சவுல் பிறர் அறியாத வகையில் ஊழியம் செய்திருந்தார். இப்பொழுது பர்னபா அவரைத் தேடிக் கொண்டு நூறு மைல்கள் பிரயாணம் சென்றார்.*

*அந்தியோகியாவில் ஊழியப் பணிகள் பர்னபாவுக்கு மிகவும் ஏராளமாயிருந்தபடியால், சற்று விடுதலையாவதற்காக சவுலை அவர் தேடினார் என்று அநேகர் கருதுகின்றார்கள். ஆயினும், அந்தியோகியாவில் பர்னபா மட்டும் ஊழியக்காரரா யிருக்கவில்லை; ஊழியப் பளு என்பது அவருடைய தோள் களில் மாத்திரம் சுமத்தப்பட்டிருக்கவில்லை (13:1). புறஜாதி யாரோடு ஊழியம் செய்கையில், பர்னபா, புறஜாதியாரின் ஊழியத்திற்கென்றே இயேசுவால் விசேஷமாய் நியமிக்கப் பட்டிருந்த ஒருவரைப் பற்றி நினைவு கூர்ந்தார் என்பதே மிகவும் ஏற்புடையதாகும்; சவுல் என்ற பெயருடைய அந்த மனிதர் (நடைமுறை நோக்கங்களுக்காக) தர்சுவுக்குக் கடத்தப்பட்டிருந்தார். எப்பொழுதுமே ஊக்கமூட்டுபவரா யிருந்த பர்னபா, சவுல் தமது சிறப்புள்ள ஊழியத்தை நிறை வேற்றும்படியான வாய்ப்பை அவருக்கு அளிக்கும்படி தேடினார்.[7]*

*“சவுலைத்தேடும்படி” மற்றும் “அவனைக் கண்டு” என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள மூலபாஷையின் வார்த்தைகள் பர்னபாவின் பணி எளிதான ஒன்றாக இருக்கவில்லை என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது. சவுல் தமது முன்னோர் களின் வீட்டில் வசியாமலும் (அநேகமாய் அவரது உரிமை*

*விலக்கப்பட்டிருக்கும்) அதிகமாய்ப் பிரயாணம் பண்ணிக் கொண்டும் இருந்தபடியால், அவரை கண்டு பிடிப்பது என்பது சுலபமாயிருந்திருக்காது. ஆயினும் பர்னபா நீடிய பொறுமை யைக் காத்து, ''அவனைக் கண்டு, அந்தியோகியாவுக்கு அழைத்துக் கொண்டு வந்தான்'' (வ. 25ஆ).*

*சவுல் (அது வரையில்) புறஜாதிகளுக்குப் பிரசங்கித்திருந் தாரா இல்லையா என்று நாம் அறியவில்லை. கொர்நேலியுவின் மனமாற்றம் மற்றும்/அல்லது அந்தியோகியாவுக்கு வருமுன் யூதர்களல்லாதவர்களிடத்தில் ஊழியம் செய்திருந்தாலும், அநேகமாக அது மிகச் சிறிய அளவில் தான் இருந்திருக்கும். அவரும் பர்னபாவும் அந்தியோகியாவின் குடிமக்களிடத்தில் பிரசங்கித்து போதித்தபோது சவுல், "கடைசியாக நான் எனது விசேஷித்த ஊழியத்தை நிறைவேற்றத் தொடங்கி விட்டேன்!" என்று நினைத்திருக்க வேண்டும்.*

*பர்னபா மற்றும் சவுல் ஆகியோர் ஒரு நல்ல குழுவாக இயங்கினார்கள். ''அவர்கள் ஒரு வருஷ காலமாய்ச் சபை யோடே கூடியிருந்து, அநேக ஜனங்களுக்கு உபதேசம் பண்ணி னார்கள்'' (26அ). ''அவர்கள் சபையாரோடு கூடியிருந்து போதித்தார்கள்'' என்பதே நேரடியான அர்த்தமாகும். எருசலேமில் இருந்த சபையைப் போலவே, அந்தியோகியாவில் இருந்த சபையும் சீரான இடைவெளிகளில் கூடி வந்தது. அவ்வாறு கூடிவந்த போது, அங்கு சபையின் உறுப்பினர்கள் மட்டுமின்றி, அவர்கள் தங்கள் நண்பர்கள் மற்றும் உறவினர் களில் போதிக்கப்படக் கூடியவர்கள் யாவரையும் அழைத்து வந்தார்கள். ஆகையால் பர்னபாவும் சவுலும் "அநேக ஜனங் களுக்கு" உபதேசம் பண்ண முடிந்தது - அந்தியோகியாவில் இருந்த சபையானது தொடர்ந்து வளர்ந்து பெருகலாயிற்று.*

## "எல்லா" சீஷர்களுக்குமான பெயர் முதல் முதல் பயன்படுத்தப்பட்டது *(11:26)*

*இந்தப் பாடத்தின் தொடக்கத்தில் குறிப்பிடப்பட்ட விசேஷ வேதவசனப் பகுதிக்கு இதுவே பின்னணியாகும்: "முதல் முதல் அந்தியோகியாவில் சீஷர்களுக்குக் கிறிஸ்தவர்கள்*

என்கிற பேர் வழங்கிற்று" (வ. 26ஆ).[8]

"கிறிஸ்தவர்" என்பது கிரேக்க வார்த்தையின் ஒலியாக்கம் ஆகும். ('Town bus' என்பது தமிழில் ''டவுன் பஸ்'' என்று ஒலியாக்கம் செய்யப்படுவது போன்றது.) இவ்வார்த்தையின் மூன்றில் இரண்டு பகுதியான ''கிறிஸ்து'' என்பதற்கு "அபிஷேகம் பண்ணப்பட்டவர்" என்று அர்த்தமாகும், இது இயேசுவைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்படும் தனிச் சிறப்பான வழிமுறையாகும் (2:36). "அவர்" என்ற முடிவு உடைமையைக் குறிக்கின்றது. உலகியல் எழுத்து நடையில் இது ஒருவருக்குரிய உடைமையைக் குறிக்கப் பயன்படுகின்றது; விசேஷமாக அந்நாட்களில், அடிமைகள் அவர்களின் எஜமானர்களுக்குரியவர்கள் என்ற அடையாளமிட இது பயன்பட்டது என்று Adolph Deissmann கூறுகின்றார். "கிறிஸ்தவர்" என்றால் "கிறிஸ்துவின் உடைமை" - அதாவது ''கிறிஸ்துவுக்குச் சொந்தமானவர்'' என்பதே நேரடியான அர்த்தமாகும். பவுல், "... நீங்கள் உங்களுடையவர்களல்ல வென்றும் அறியீர்களா? கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர் களே ..." (1 கொரி. 6:19, 20) என்று கூறினார்!

"கிறிஸ்தவர்" என்ற பெயரைத் தொடங்கி வைத்தது யார்? இது சபையின் எதிரிகள் ஏளனமாய்க் கொடுத்த பெயர் என்று அநேக எழுத்தாளர்கள் தாமாகவே கற்பனை செய்து கொள்கின் றார்கள். இதை ஏன் ஆராயாமல் ஏற்றுக் கொள்ள வேண்டும்? மெக்கார்வி அவர்கள் சுட்டிக்காட்டியபடி, ''சிறுமைப் படுவதற்கோ அல்லது இறுமாப்பு கொள்வதற்கோ [பெயரில்] ஒன்றும் கிடையாது.'' சீஷர்கள் ''கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்பட்டதால்" அந்தப் பெயர் ஒரு வசை மொழியாகத் தரப்பட்டதென்று முடிவு செய்ய நாம் வற்புறுத்தப் படுகின்றோம் என்ற உண்மையைச் சிலர் வலியுறுத்து கின்றார்கள். ஆயினும், "அழைக்கப்பட்டார்கள்" என்று மொழி பெயர்க்கப்படும் கிரேக்க வார்த்தையானது சில வேளைகளில் "தேவனால் அழைக்கப்பட்டவர்கள்"[9] என்ற அர்த்தத்தையும் தருகின்றது. ஹியுகோ மெக்கார்டின் மொழிபெயர்ப்பில் "the disciples were *divinely* called 'Christians' first at Antioch" என்றுள்ளது. அந்தியோகியாவில் இருந்த ஏவப்பட்ட பேச்சாளர்களில் ஒருவர் (13:1) சீஷர்களை முதல் முதல் இவ்விதமாய் அழைத் திருக்கலாம்; புறஜாதிகளுக்காக அப்போஸ்தலரான பவுல்

இச்சொற்றொடரை உருவாக்கியிருக்கலாம். ஒரு விஷயம் உறுதியானதாகும்: இந்தச் சொற்றொடரின் தோற்றம் எதுவாயிருப்பினும், "ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதினால் பாடுபட்டால் வெட்கப்படாமலிருந்து, அதனிமித்தம் தேவனை மகிமைப்படுத்தக் கடவன்" (1 பேது. 4:16) என்று எழுதும்போது பேதுரு இவ்வார்த்தைக்குத் தெய்வீக அங்கீகார முத்திரையைப் போட்டார்.

பெயரின் தொடக்கத்தைப் பொறுத்த மட்டில் "யார்?" "எப்படி?" என்பதைக் காட்டிலும் "எப்பொழுது?" "எங்கே?" "ஏன்?" என்பவைகள் அதிக கவனத்திற்குரியவைகளாய் இருக்கின்றன. "எப்பொழுது?" மற்றும் "எங்கே?" என்பவைகள் லூக்காவினால் கூறப்பட்டன: "எப்பொழுது?" - சவுல் பர்னபா வுடன் "ஒரு வருட காலமாய்" ஊழியம் செய்திருந்த பின்பு; "எங்கே?" - முதல் முதல் "அந்தியோகியாவிலே" சீஷர்களுக்குக் கிறிஸ்தவர்கள் என்கிற பேர் வழங்கிற்று. "எப்பொழுது?" மற்றும் "எங்கே?" ஆகியவை, ஆவிக்குரிய சீயோனைப் பற்றி ஏசாயாவின் புத்தகத்தில் உள்ள வசனப்பகுதியை நமக்கு நினைவு படுத்துகின்றன: (சந்தர்ப்பப் பொருளில் பார்க்கும் போது தீர்க்கதரிசி எருசலேமுக்குப் பேசினார். இன்றைய நாட்களில் தேவன் தமது மக்களாகிய சபையில் வாசம் பண்ணுகின்றார்). "ஜாதிகள் உன் நீதியையும், சகல ராஜாக் களும் உன் மகிமையையும் காண்பார்கள்; கர்த்தருடைய வாய் சொல்லும் புது நாமத்தால் நீ அழைக்கப்படுவாய்" (ஏசா. 62:2). "ஜாதிகள்" என்பது "புறஜாதியாரை" குறிப்பிடும் இன்னொரு வழிமுறையாகும். "ஜாதிகள் [புறஜாதிகள்]" மற்றும் "இராஜாக் கள்" பற்றிய குறிப்புரைகள் உங்களுக்கு இன்னொரு வாக்குத்தத்தத்தை நினைவூட்டுகின்றனவா? சவுலின் தனிச் சிறப்பான ஊழியத்தைப் பற்றிய இயேசுவின் வார்த்தைகள் என்ன? "அவன் புறஜாதிகளுக்கும் ராஜாக்களுக்கும் ... என்னு டைய நாமத்தை அறிவிக்கிறதற்காக நான் தெரிந்து கொண்ட பாத்திரமாயிருக்கிறான்" (9:15). புறஜாதியாருக்கும் இராஜாக் களுக்கும் அப்போஸ்தலரானவர் தமது ஊழியத்தை நிறைவாக நிறைவேற்றத் தொடங்கிய அதே பட்டணத்தில் இயேசுவைப் பின்பற்றியவர்களுக்கு "ஒரு புதிய பெயர் (இயேசுவைப் பின்பற்றுபவர்களைக் குறிக்கின்ற சகோதரர்கள், சீஷர்கள் முதலியன யூதமார்க்கத்தில் ஏதாவதொரு வகையில்

பயன்படுத்தப் பட்டிருந்தன) கொடுக்கப்பட்டது'' என்பது வெறுமே தற்செயலானதா?

"கிறிஸ்தவர்'' என்ற பெயர் கொடுக்கப்பட்டதில் தொடர்புடைய எல்லாவற்றையும் நான் புரிந்து கொள்ளாமல் இருக்கலாம், ஆனால் இரண்டு உண்மைகள் தெளிவாயிருக்கின்றன: (1) இது ஒரு விசேஷித்த பெயர் ஆகும். வேறு எந்தப் பெயரும் கிறிஸ்துவை இந்த அளவுக்கு கனப்படுத்துவதில்லை என்கிற அதே வேளையில், இது நாம் அவருக்குப் பட்டுள்ள கடனை நமக்கு நினைவுபடுத்துகின்றது. (2) இது ஒரு விசேஷித்த இடத்தில் - யூதரும் புறஜாதியாரும் "கிறிஸ்துவுக்கு உரியவர்கள்'' என்ற தங்களது பொதுவான பிணைப்பை ஒப்புக் கொண்ட பட்டணத்தில் - தொடங்கியது! நாமும் இதைப் பெருமிதத்துடன் சூடிக் கொள்வோம் - எப்பொழுதும் கர்த்தருக்குரியவர்களாகவே நடந்து கொள்ளுவோம்!

## "எல்லார் மேலும்" அக்கறையை வெளிப்படுத்த முதல் முதல் புறஜாதியார் வாய்ப்புப் பெற்றார்கள் (11:27-30)

பர்னபா, சவுல் இன்னும் மற்றவர்கள் அந்தியோகியாவில் புதிய கிறிஸ்தவர்களுடன் ஊழியம் செய்து கொண்டிருக்கையில், தெற்கிலிருந்து பார்வையாளர்கள் வந்தார்கள்: ''அந்நாட்களிலே எருசலேமிலிருந்து சில தீர்க்கதரிசிகள் அந்தியோகியாவுக்கு வந்தார்கள்'' (வ. 27). தீர்க்கதரிசிகள் என்பவர்கள் தேவனுக்காகப் பேசும் ஏவப்பட்ட மனிதர்களாவார்கள். சிலர் தீர்க்கதரிசன வரத்தைப் பெறுவார்கள் (2:17) என்று பெந்தெகொஸ்தே நாளன்று பேதுரு குறிப்பிட்டிருந்தார், ஆனால் சபையில் தீர்க்கதரிசிகளைப் பற்றி இவ்விடத்தில்தான் முதல் முதலாகக் குறிப்பிடப்பட்டது. அவர்கள் எருசலேமில் இருந்து வந்தார்கள் என்ற உண்மையானது எருசலேம் மற்றும் அந்தியோகியா ஆகிய இடங்களில் இருந்த பிராந்திய சபைகளுக்கிடையில் இருந்த ஐக்கியத்தைச் சுட்டிக்காட்டுவதாய் இருக்கின்றது.

''அவர்களில் ஒருவனாகிய அகபு என்பவன் எழுந்து''

(வ. 28அ). அகபு என்பவர் நன்கு அறியப்பட்ட ஒரு தீர்க்க தரிசியாக இருந்தார்; அவரை நாம் மறுபடியும் சந்திப்போம் (21:10, 11). அவன் "உலகமெங்கும் கொடிய பஞ்சம் உண்டா கும் என்று ஆவியானவராலே அறிவித்தான்'' (11:28ஆ). "உலகம்" என்பது "குடியிருப்புப் பகுதியான உலகம்" என்பதை யும், விசேஷமாக ரோம சாம்ராஜ்யத்தையும் குறிக்கின்றது. லூக்கா இவ்விடத்தில் ஒரு ஆசிரிய விமர்சனத்தைக் கூடத் தருகின்றார்: ''அது அப்படியே கிலவுதியு ராயனுடைய நாட்களில் உண்டாயிற்று" (வ. 28இ). கிலவுதியு ராயனுடைய ஆட்சிக் காலத்தில் (கி.பி. 41-54) ரோம சாம்ராஜ்யத்தின் அநேக பகுதிகளில் பஞ்சத்தினால் பாதிப்பு உண்டாயிற்று என்று உலக வரலாற்றில் பதிவாகியுள்ளது.[10]

அகபுவும் அவரது நண்பர்களும் அந்தியோகியாவுக்கு ஏன் வந்தார்கள் என்று நாம் அறியவில்லை. ஒருவேளை அவர்கள் உதவிக் கேட்பதற்காகக் குறிப்பாக வந்திருக்கலாம். ஒருவேளை அவர்களிடத்தில் உதவி கேட்கும் விருப்பம் இல்லாதிருந் திருக்கலாம், ஆனால் சபைகளுக்குச் சென்று பஞ்சத்தைப் பற்றிக் கிறிஸ்தவர்களுக்குத் தகவல் அறிவித்து, அவர்கள் அதற்குத் தயாராகும்படி ஊழியம் செய்யக் கட்டளை பெற்றிருக்கலாம். அவர்களின் நோக்கம் எதுவாயிருந்தாலும், அந்தியோகியாவில் இருந்த சீஷர்களின் பதில்செயல் உடனடி யாகவும், சுயநலமற்றதாகவும் இருந்தது: "அப்பொழுது சீஷரில் அவரவர் தங்கள் தங்கள் திராணிக்குத் தக்கதாக யூதேயாவில் குடியிருக்கிற சகோதரருக்கு உதவியாகப் பணஞ் சேகரித்து அனுப்ப வேண்டுமென்று தீர்மானம் பண்ணினார்கள்" (வ. 29).

அகபுவின் வார்த்தைகளின்படி, பஞ்சமானது பலஸ்தீனத் தைத் தாக்குவது போலவே, சீரியாவையும் தாக்குவதாய் இருந்தது, ஆனால் அந்தியோகியாவில் இருந்த கிறிஸ்தவர்கள் தங்களைப் பற்றி எண்ணாமல், எருசலேமில் இருந்த தங்களின் சகோதர சகோதரிகளைப் பற்றி எண்ணினார்கள். எருசலேமில் இருந்த கிறிஸ்தவர்களைப்போல அவர்கள் உபத்திரவப் பட்டிருந்ததில்லை; எருசலேமில் இருந்த அநேக வீட்டார் போல அவர்கள் தங்கள் வேலைகளை இழந்திருக்கவில்லை; அவர்கள் அநேகமாக, எருசலேமில் இருந்த சகோதரர்களைக் காட்டிலும் தாங்கள் பஞ்சத்தில் பிழைத்திருக்க அதிகம் சிறந்த வாய்ப்புப் பெற்றிருந்ததாக எண்ணியிருப்பார்கள். ஆகையால்,

அவர்கள் தெற்கு நோக்கி அனுப்புவதற்காக உணவு, மற்ற பொருட்கள்[11] ஆகியவற்றை உடனடியாகச் சேகரிக்கத் தொடங்கினார்கள்.

வசனம் 29ல் இரண்டு சொற்றொடர்கள் எனது கவனத்தை ஈர்க்கின்றன: (1) "அவரவர்." அந்தியோகியாவின் சபையில் இருந்த எல்லா உறுப்பினர்களும், தங்கள் சகோதரர்களின் நெருக்கடி நிலையினால் இருதயத்தில் பரிவுணர்வு ஏற்பட்டவர்களாயிருந்தார்கள். (2) "தங்கள் தங்கள் திராணிக்குத் தக்கதாக." பழைய ஏற்பாட்டில் தேவன் ஒரு குறிப்பிட்ட சதவிகிதத்தைக் கட்டளையிட்டிருந்தார் (10 சதவிகிதம்; மல். 3:8, 10). புதிய ஏற்பாட்டின் அடிப்படையில் ஒவ்வொரு மனிதரும் "தன் தன் வரவுக்குத் தக்கதாக" (1 கொரி. 16:2) கர்த்தரின் ஊழியத்திற்கென்று காணிக்கை கொடுக்க வேண்டும். சமமானநிலையான நிதி அமைப்பு எதையும் கற்பனை செய்ய முடியாது: அதிகம் உள்ளவர்கள் அதிகம் கொடுக்கின்றார்கள்; குறைவாய் உள்ளவர்கள் குறைவாய்க் கொடுக்கின்றார்கள்.

பொதுவாக யூத கிறிஸ்தவர்களும், குறிப்பாக எருசலேம் சபையாரும் அவர்களுக்கு (அந்தியோகியா சபையாருக்கு) செய்திருந்தவைகளுக்குப் பதில் (ஓரளவு) திரும்பச் செய்ய வாய்ப்புக் கிடைத்ததற்காக அந்தியோகியா சபையார் மகிழ்ச்சிடைந்தார்கள் என்பது தெளிவு. யூத கிறிஸ்தவர்கள் சிறந்த செய்தியை (சுவிசேஷத்தை) அவர்களுக்குக் கொண்டு வந்தார்கள்; எருசலேம் சபையார் தங்களின் சிறந்த மனிதரை (பர்னபாவை) அவர்களிடத்திற்கு அனுப்பியிருந்தார்கள்; இப்பொழுது இவர்கள் தங்களால் முடிந்த அளவு சிறந்த கொடைகளை அவர்களுக்கு அனுப்புவார்கள். பவுல் பின்னாளில் கலாத்தியருக்கு எழுதும்போது, "மேலும், திருவசனத்தில் உபதேசிக்கப்படுகிறவன் உபதேசிக்கிறவனுக்குச் சகல நன்மைகளிலும் பகிர்ந்து கொடுக்கக் கடவன்" (கலா. 6:6) என்று எழுதினார். இதையேதான் அந்தியோகியாவில் இருந்த கிறிஸ்தவர்கள் செய்தார்கள்.

சமீபத்திய ஆண்டுகளில், சபைகள் எவ்விதத்தில் ஒத்துழைக்க முடியும் என்பற்குத் தேவன் ஒருபொழுதும் எவ்வித செயல்பாடும் புரிந்ததில்லை என்பதாகச் சிலர் சட்டம் இயற்றியுள்ளார்கள். இந்தத் தனி மனிதர்கள் கொண்டுள்ள சில பயங்களை நான் புரிந்து கொள்கின்ற அதே வேளையில்,

சபைகளைத் தனிமைப்படுத்தி வைக்க ஊக்கம் கொடுத்து, ஒரு சபையார் இன்னொரு சபையாருக்கு உற்சாகமும் ஆதரவும் அளிப்பதைக் குறித்துச் சட்டமியற்ற முயற்சி செய்யும் ஒவ்வொரு செயல்பாட்டைக் குறித்தும் நான் வருத்தமடைகின்றேன். கொஞ்சமல்ல, அதிகமான சபைகள் மற்ற சபைகளிடம் தங்கள் அன்பு, அக்கறை இவற்றை வெளிப்படுத்துவது நமக்குத் தேவை.

அந்தியோகியாவில் இருந்த கிறிஸ்தவர்கள் ''பணஞ் சேகரித்து அனுப்பத் தீர்மானம்'' செய்ததோடு, அவர்கள் தீர்மானத்தை நிறைவேற்றியவர்களாயும் இருந்தார்கள். "அப்படியே அவர்கள் சேகரித்து, பர்னபா, சவுல் என்பவர்களுடைய கையில் கொடுத்து, மூப்பரிடத்திற்கு அனுப்பினார்கள்" (வ. 30). நல்ல நோக்கங்கள் மட்டுமே காலி வயிற்றை நிரப்பி விடாது அல்லது நடுங்கும் உடலின்மேல் துணியைப் போர்த்தி விடாது. தங்களுடைய அன்பின் கொடைகளைக் கொடுப்பதற்கென்று அந்தக் கிறிஸ்தவர்கள், பர்னபா, சவுல் ஆகியோரிடத்தில் அப்பொறுப்பை நம்பிக்கையுடன் ஒப்படைத்தார்கள் என்பதைக் கவனியுங்கள். பர்னபா, எருசலேம் சபையாரால் அனுப்பப்பட்டவர், சவுல், பர்னபாவால் கொண்டு வரப்பட்டவர்; ஆனால் இவ்விரு மனிதர்களுமே அந்தியோகியாவில் இருந்த சகோதரர்களின் நம்பிக்கையைப் பெற்றார்கள்.

அந்த நன்கொடையானது அப்போஸ்தலர்களிடத்திற்கல்ல ஆனால் ''மூப்பர்களிடத்திற்கு'' எடுத்துச் செல்லப்பட வேண்டியதாயிருந்தது. அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில் இவ்விடத்தில்தான் சபையின் முன்னோடிகள், ''மூப்பர்கள்'' (''மூப்பர்கள்'' என்றால் என்ன அர்த்தம் தருகின்றது என்றறிய அப். 14:23; 20:28 க்கான குறிப்புகளைக் காணவும்.) என்று முதல் முதல் அழைக்கப்பட்டதைப் படிக்கின்றோம். "மூப்பரிடத்தில்" என்பது யூதேயாவின் எல்லா சபைகளிலும் இருந்த மூப்பர்களையோ அல்லது எருசலேம் சபையிலிருந்த மூப்பர்களையோ குறிப்பிடக் கூடும். தர்ம ஊழியத்தை நிறைவேற்றின பிறகு, ''பர்னபாவும், சவுலும் எருசலேமை விட்டுத் திரும்பி வந்தார்கள்'' (12:25) என்று கூறப்படுவதால், அந்த தர்மப் பணமானது எருசலேமுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கவும், எருசலேமின் மூப்பர்களால்

*அது விநியோகிக்கப்பட்டிருக்கவும் சாத்தியக் கூறு உள்ளது.*[12] *சபையை வழிநடத்திச் செல்லும் பணியானது அப்போஸ்தலர் களிடத்திலிருந்து மூப்பர்களிடத்திற்கு மாறிக் கொண்டிருந்தது. அப்போஸ்தலத்துவம் என்பது சபையில் அப்போதைக்கான (தற்காலிகமான) நிலையாகவும்; மூப்பர்கள் என்பது சபையின் நிரந்தரமான நிலையாகவும் இருந்தது.*

*கர்த்தருடைய சபையின் பண்பாக இருக்க வேண்டியதான பதிலீடு செய்யும் அன்பிற்கான ஒரு அற்புதமான எடுத்துக் காட்டை நமது வேதவசனப் பாடப் பகுதி அளிக்கின்றது. எருசலேமில் இருந்த சபையார், அந்தியோகியாவுக்குப் பர்னபாவை அனுப்பியதன் மூலம் தங்களது ஆதரவைக் காண்பித்தார்கள். அந்தியோகியாவில் இருந்த சபையார் எருசலேமுக்கு உதவிப் பொருட்களை அனுப்பியதன் மூலம் தங்களது ஆதரவைக் காண்பித்தார்கள். இரு பிராந்திய சபைகளுமே தன்னாட்சி அமைப்புடையவைகளாகும்; ஒருவர் மற்றவருக்கு உதவ வேண்டும் என்று உயரதிகாரி யாரும் கட்டளையிடவில்லை; அவர்கள் அன்பினாலேயே அப்படிச் செய்தார்கள்.*

*ஒரு கையை இழந்திருந்த பையன் ஒருவன் ஒருமுறை வேதாகம வகுப்பு ஒன்றில் கலந்து கொண்டான். அங்கிருந்த ஆசிரியர் வகுப்பு முடியும் வரை சூழ்நிலையை நல்ல முறையில் நடத்திச் சென்றார். பிறகு அவர் தமது கரங்களை வழக்கமான விரல் விளையாட்டிற்குட்படுத்தி "நாம் சபையை ஏற்படுத்து வோம்" என்று கூறினார்.*[13] *அந்தப் பையன் அதில் பங்கு பெற முடியாதென்பதை அவர் திடீரென்று உணர்ந்தார். என்ன செய்வதென்று திகைத்த நிலையில் அவர் நிற்கையில், வகுப்பில் இருந்த ஒரு சிறுமி அப்பையனிடத்தில் நகர்ந்து சென்று, தனது ஒரு கையை அப்பையனின் ஒரு கையுடன் இணைத்துக் கொண்டு "நாம் ஒன்றாய்க் கூடி சபையை ஏற்படுத்துவோம்" என்று கூறினாள். நாம் ஒவ்வொருவரும் சுயாதீனமுள்ள, தன்னாட்சி அமைப்புள்ள பிராந்திய சபையின் பாகமாய் இருந்த போதிலும், "ஒன்றாய்க் கூடி சபையை ஏற்படுத்து வதற்காக" நாம் நமது கரங்களை இணைத்துச் செயல்பட வேண்டியதாய் இருக்கின்றது!*

# முடிவுரை

"அப்போஸ்தருடைய நடபடிகள், 1" இதழில் 2:42-47ன் அடிப்படையில் "நான் அங்கம் வகிக்க விரும்பும் சபை" என்ற தலைப்பில் ஒரு பாடம் சேர்க்கப்பட்டிருந்தது. 11:19-30ல் நான் உறுப்பினராக விரும்பும் இன்னொரு பிராந்திய சபையை நாம் காண்கின்றோம், இது அந்தியோகியாவில் இருந்த சபையாகும். (1) இது ஒரு அக்கறையுள்ள - இனம் அல்லது பின்னணி என்ற பாகுபாடின்றி எல்லா மனிதர்கள்மேலும் அக்கறையுள்ள - ஒரு பிராந்திய சபையாக இருந்தது. (2) இது ஒரு சுவிசேஷ அறிவிப்பு உள்ள - எல்லாரிடத்திலும் நற்செய்தியைப் பகிர்ந்து கொள்கின்ற - ஒரு உள்ளூர் சபையாக இருந்தது. (3) இது ஒரு சுயநலமற்ற - யாருக்குப் புகழ் கிடைக்கும் என்பது பற்றிக் கவலைப்படாத - ஒரு பிராந்திய சபையாக இருந்தது. (4) இது கிறிஸ்துவைக் கனப்படுத்தும் - பெருமிதத்துடன் அவரது பெயரைச் சூடிக் கொள்ளும்-ஒரு பிராந்திய சபையாக இருந்தது. (5) இது பாராட்டக் கூடிய - பாராட்டுதலை வெளிப்படுத்தக் கூடிய - ஒரு பிராந்திய சபையாக இருந்தது - ஆகையால் (6) இது வளருகின்ற ஒரு பிராந்திய சபையாக இருந்தது - தேவன் அவர்களது பிரயாசங்களை ஆசீர்வதித்தார். வேறு எந்த வசனப் பகுதிகளிலும், "வளர்ச்சிக் கூற்றுகள்" இவ்வளவு அதிகமாய் ஒரு சில வசனங்களில் அடங்கியிருப் பதை நாம் காண முடிவதில்லை: "கர்த்தருடைய கரம் அவர் களோடே இருந்தது; அநேக ஜனங்கள் விசுவாசிகளாகி, கர்த்தரி டத்தில் திரும்பினார்கள்" "அநேக ஜனங்கள் கர்த்தரிடமாய்ச் சேர்க்கப்பட்டார்கள்" "அவர்கள் ... அநேக ஜனங்களுக்கு உபதேசம் பண்ணினார்கள்" (வ. 21, 24ஆ, 26அ). இந்தப் பண்புகளுள்ள சபையை நாம் பெற்றிருக்க விரும்பினால், நாம் இந்தப் பண்புகள் உள்ள உறுப்பினர்களாயிருக்க வேண்டும்.

இப்பாடத்தை முடிக்கும் இந்த வேளையில், இந்த வேதவசனப் பகுதியிலிருந்து நாம் கற்றுக் கொண்டவைகளின் வெளிச்சத்தில் உங்களைப் பரிசோதனை செய்து பாருங்கள். இந்தக் குறிப்பிட்ட பாடத்தை நாம் "முதல் செயல்பாடுகள்" பற்றிப் பேசுவதில் தொடங்கினோம். சிலருக்கு, ஆவிக்குரிய விதத்தில் வினயமாய்ச் சிந்தித்துப் பார்ப்பதென்பது இதுவே முதல் முறையாயிருக்கலாம், ஆனால் அவ்வாறு செய்வ

தென்பது உங்கள் வாழ்க்கைக்கு ஆசீர்வாதமாய் அமையும். சிலர், அந்தியோகியாவில் இருந்தவர்கள்போல் தாங்கள் மனந்திரும்பி, ஞானஸ்நானம் பெற்று, ‘‘கர்த்தரிடத்தில் திரும்பாததால்’’ கிறிஸ்துவின் பெயரைச் சட்டப்பூர்வமாய்த் தரித்துக் கொள்ள முடியாது என்பதைக் கண்டு பிடிக்கலாம். ஒருவேளை நீங்கள் அந்நிலையில் இருந்தால், கர்த்தருக்குக் கீழ்ப்படிவதைத் தள்ளிப் போடாதீர்கள். இந்த நாள் ஒரு கிறிஸ்தவராக, அவருக்கே உரியவராக நீங்கள் வாழும் வாழ்க்கையின் முதல் நாள் ஆகலாம்!

## காட்சி-உதவிக் குறிப்புகள்

‘‘கிறிஸ்தவர்’’ என்ற பெயரை விளக்கமாய்க் காட்டு வதற்காக, “கிறிஸ்தவர்” என்ற வார்த்தையைக் கரும்பலகையில் எழுதுங்கள். அவ்வார்த்தையில் மூன்றில் இருபகுதி “கிறிஸ்து” என்றிருப்பதைக் குறிப்பிடுங்கள். பிறகு, “அவர்” என்ற முடிவு “உரியது”, அல்லது “உடைமையானது” என்று குறிப்பிடுவதை விளக்குங்கள். ‘‘கிறிஸ்தவர்’’ என்பதின் கீழ், ‘‘கிறிஸ்துவினு டையவர்” மற்றும் “கிறிஸ்துவுக்குச் சொந்தமானவர்” என்பதின் அர்த்தத்தை வலியுறுத்தும்படியாக எழுதுங்கள்.

(கிறிஸ்து) (அவர்)
கிறிஸ்துவினுடையவர்
கிறிஸ்துவுக்குச் சொந்தமானவர்

இவ்வார்த்தைகளை அட்டைத் துண்டுகளின்மேல் கூட எழுதி வைத்துக் கொள்ளலாம்.

## பிரசங்கக் குறிப்புகள்

அந்தியோகியாவில் இருந்தவர்களுக்குப் பர்னபாவின் செய்தி பற்றிய சுருக்கமானது ஒரு மாபெரும் பாடத்தைத் தரக்

*கூடும்: "சந்தோஷப்பட்டு, கர்த்தரிடத்தில் மன நிர்ணயமாய் நிலைத்திருக்கும்படி எல்லாருக்கும் புத்தி சொன்னான்" (வ. 23). கிறிஸ்தவ வாழ்க்கையைத் தொடங்குகின்ற அநேகர் விழுந்து போய் விடுகின்றார்கள்! "கர்த்தருக்குள் நிலைத்திருக்கும்படி" புத்தி சொன்ன பர்னபாவைப் போன்ற மனிதர்கள் இன்றும் நமக்குத் தேவை. இந்தப் பாடமானது "கர்த்தருக்குள் உண்மை யாய் நிலைத்திருத்தல்" என்று தலைப்பிடப்படலாம், இதன் திறவுகோல் கருத்துக்கள் பின்வருமாறு: (1) நீங்கள் பெற்ற ஆசீர்வாதங்களை நினைவுகூருங்கள் (அவன் சந்தோஷப் பட்டான்), (2) உங்கள் சகோதர சகோதரிகளை நினைவு கூருங்கள் ("எல்லாருக்கும் புத்தி சொன்னான்"), (3) உங்கள் மன உறுதிப்பாட்டினை நினைவுகூருங்கள் ("மனநிர்ணயமாய்"), (4) உங்கள் கர்த்தரை நினைவுகூருங்கள் ("கர்த்தரிடத்தில். ... நிலைத்திருக்கும்படி").*

---

குறிப்புகள்

*[1]இது போன்ற மற்ற பதினாறு பட்டணங்கள் மேன்மைப்படுத்தப்பட்டன. 13:14ல் நாம் மற்றொரு அந்தியோகியா பட்டணத்தைக் காண்போம். [2]சிரேனே என்பது வடக்கு ஆப்பிரிக்காவின் ஒரு பட்டணமாகும். பெந்தெகொஸ்தே நாளன்று சிரேனேயில் இருந்த யூதர்கள் வந்திருந்தார்கள் (2:10); அதில் சிலர் மனமாற்றப்பட்டிருப்பார்கள்; சிரேனே ஊரானாகிய சீமோன் (மத். 27:32) அந்தியோகியாவுக்கு சுவிசேஷத்தைக் கொண்டு சென்றவர்களில் ஒருவரா யிருக்கலாம் என்ற கருத்தும் உண்டு. [3]புறஜாதியாருக்கு அவர்கள் "கிறிஸ்து இயேசுவை" பிரசங்கித்தார்கள் என்றிருப்பதற்குப் பதில் "கர்த்தராகிய இயேசுவை" பிரசங்கித்தார்கள் என்றிருப்பதில் சில குறிப்பிட்ட விசேஷங்கள் காணப்படலாம். "மேசியா" என்ற கருத்து புறஜாதியாருக்கு ஒன்றுமற்றதாகும். ஆனால் "கர்த்தர்" என்ற கருத்து ஆழ்ந்த பொருள் உள்ளதாகும். [4]அந்தியோகியாவுக்குச் சென்றவர்கள் யாரேனும் அற்புதங்கள் செய்ய முடிந்திருந்ததா என்று நாம் அறியவில்லை, ஆனால் அவர்களில் சிலர் தலைமேல் அப்போஸ்தலர்கள் கைகளை வைத்து ஜெபித்திருக்கச் சாத்தியக் கூறு உள்ளது. [5]பர்னபா பன்னிருவரில் ஒருவராக இருக்கவில்லை யாதலால், அவரது ஊழியம் வித்தியாசப்பட்டதாக இருந்தது. சமாரியாவில் புதிய கிறிஸ்தவர்களுக்கு அற்புத வரங்களைத் தருவதற்காக பேதுருவும் யோவானும் அவர்களுடைய தலைகளின்மேல் கைகளை வைத்து ஜெபித்தனர். பர்னபா இவ்வாறு செய்ய முடியாதிருந்தது; அவர் மக்களுக்குப் பிரசங்கித்தார். [6]"பரிசுத்த ஆவியினால் நிறைந்தவர்" என்றால், "பரிசுத்த ஆவியானவரால் கட்டுப்படுத்தப் பட்டவர்" என்றும், அற்புதமான அல்லது அற்புதமற்ற வழிகளில் அவரால் பயன்படுத்தப்படக் கூடியவர் என்றும் அர்த்தமாகின்றது. பர்னபா ஏவப்பட்ட ஒரு தீர்க்கதரிசி மற்றும்/அல்லது போதகராய் இருந்ததால் (13:1), இந்தச் சொற்றொட ரானது அற்புதத்தை உய்த்துணரும் பண்பைக் கொண்டுள்ளது. ஆயினும் சந்தர்ப்பப் பொருளில் பார்க்கையில், பர்னபாவின் வாழ்க்கையானது அவரில் பரிசுத்த*

*ஆவியானவர் தங்கியிருந்ததை விளக்கப்படுத்தியதைக் குறிப்பதற்கே இது உள்ளதென்று காணப்படுகின்றது (கலா. 5:22, 23).* [7]*பர்னபா ஆவிக்குரிய ஒரு வரத்தைப் பெற்றிருந்தபடியால் (13:1), அவர் சவுலைத் தேடிய செயலானது 13:2ல் காணும் நிகழ்ச்சியை எதிர்பார்த்து பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலின்படியான தாயிருக்கலாம்.* [8]*லூக்கா இவைகளை எழுதிய காலத்தில் "கிறிஸ்தவர்" என்ற வார்த்தையானது நன்கு அறியப்பட்ட ஒரு பெயராயிருந்தது என்பதை அவரது வார்த்தைகள் சுட்டிக்காட்டுகின்றன, மற்றும் அதன் தொடக்கத்தைப் பற்றிய ஒரு சுருக்கமான விளக்கம் மதிப்புள்ளதாயிருக்கும் என்று அவர் எண்ணினார்.* [9]*கிரேக்க வார்த்தை (Chrematizo) யானது "தேவயத்தனமாய்க் கட்டளை பெறுதல்" என்று 10:22 லும், "தேவனால் எச்சரிக்கப்பட்டு" என்று மத். 2:12, 22; எபி. 8:5; 11:7 ஆகியவற்றிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இது லூக். 2:26 மற்றும் எபி. 12:25 ஆகியவற்றில் தெய்வீக செய்தித் தொடர்பைக் குறிப்பிடவும் பயன் படுத்தப்பட்டது.* [10]*ரோமாபுரி, கிரேக்கு, எகிப்து மற்றும் யூதேயா ஆகிய நாடுகளைப் பஞ்சம் தாக்கியது. யோசிப்பஸ் என்பவரின் கூற்றுப்படி, யூதேயாவைப் பாதித்த பஞ்சமானது கி.பி. 45-47ல் ஏற்பட்டது.*

[11]*உங்களிடத்தில்* NASB *இருந்தால் அதில் இவ்விடத்தில்* "contribution" *என்ற வார்த்தை சாய்வெழுத்துக்களில் அச்சிடப்பட்டுள்ளதை - அதாவது அவ்வார்த்தை யானது மொழிபெயர்ப்பாளர்களால் தரப்பட்டது - என்பதை நீங்கள் கவனிக்கக் கூடும். "நிவாரணம்" (உதவியாக) என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையானது "சேவை செய்தல்" என்ற அர்த்தம் தரும் ஒரு பொதுமைச் சொல்லாக மட்டுமே உள்ளது. எந்த வகையான உதவி அனுப்பப்பட்டதென்று அது சுட்டிக்காட்டுவதில்லை.* (KJV*யில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ள தமிழ் வேதாகமத்தில் "பணம் சேர்த்து" என்ற வார்த்தை கூடுதலாகத் தரப்பட்டுள்ளது.) பஞ்சகாலத்தில் அனுப்பும் உதவி என்பது சாதாரணமாக பணமாக இன்றி, கெட்டுப் போய் விடாத உணவுப் பொருட்களாகவே இருக்கும், ஏனென்றால் பஞ்சம் நிலவும் பகுதிகளில் உணவுப் பொருட்கள் கொஞ்சமாகவும், அந்தக் கொஞ்சமான உணவின் விலையோ தடை செய்யப்பட்டதாகவும் இருக்கும்.* [12]*எருசலேமின் சபையில் மூப்பர்கள் இருந்தார்கள் என்று பின்னால் நமக்குக் கூறப்பட்ட உண்மையினால் (15:2) இந்தச் சாத்தியக் கூறு பலப்படுத்தப்படுகின்றது, ஆனாலும் யூதேயாவில் இருந்த மற்ற உள்ளூர் சபைகளில் மூப்பர்கள் இருந்தார்களா இல்லையா என்று நமக்குக் கூறப்படவில்லை. "சபையின் ஒத்துழைப்புக்கு தனிப்பட்ட முன் மாதிரியை" வலியுறுத்துபவர்களில் அநேகர், எருசலேமின் மூப்பர்களால் அந்த உதவியானது யூதேயா முழுவதிலும் பகிர்ந்து கொடுக்கப் பட்டிருக்கும் என்ற சாத்தியக் கூற்றை மறுக்கின்றார்கள், ஏனென்றால், தாங்கள் கண்டு பிடித்துள்ளதாக எண்ணும் "மாதிரியை" இச்செயல்பாடு மீறுவதாக அவர்கள் கருதுகின்றார்கள்.* [13]*குழந்தைகளின் இந்த விரல் விளையாட்டில், கைகளும் விரல்களும் முதலில் சபை கூடும் கட்டிடத்தை உருவகித்துப் பின்பு கட்டிடத்தின் மேல் கூர்மையான ஒரு கோபுரத்தையும், கடைசியாக கட்டிடத்தினுள் மக்களையும் உருவாக்குகின்றன.*